அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 123/2016
தேதி 21.7.2016

# புதிய வரிகள் இல்லாமல், வளர்ச்சியை நோக்கிய நிதிநிலை அறிக்கை பாராட்டுக்குரியது ச.ம.க.தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை

தமிழகம் தொழில் வளர்ச்சியில் முன்னேறுவதற்கும். விவசாய விளைநிலங்கள் பெருகவும் பாதுகாக்கப் படவும் தேவையான அடிப்படை "infrastructure" என்று சொல்லக் கூடிய உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப் படவேண்டும். இந்த நிதி நிலை அறிக்கையில், அதற்கு தேவையான நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் விரிவாக்கம், தேசிய நதிகளை இணைக்க வலியுறுத்தல், நீர்வளங்கள், ஊரக வளர்ச்சிதுறைக்கு ரூ21,186 கோடி 2வது மெட்ரோ ரயில் திட்ட அறிக்கை விரைவில் தயாரிக்கப்படுவது, போக்குவரத்து துறை, 2,000 புதிய அரசு பேருந்துகள் வாங்குவது
வைகை, நொய்யல் ஆறுகள் தூர்வாரப்படுவது, கடலூர் மாவட்டத்தில் ஆற்றங்கரைகள் மேம்படுத்தப்படுவது மற்றும் தொழில் கட்டமைப்பு இவை அனைத்தும் கண்டிப்பாக கிராம மற்றும் நகர் புற வாழ்க்கையை மேம்படுத்தும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

தொழில் துறை வளர்வதற்கு மட்டுமல்லாமல், தொழிற்சாலைகளில் வேலை செய்வதற்கும் மற்ற துறைகளில் சிறந்து விளங்க தேவையான திறனை மேம்படுத்த ஒதுக்கப் படும் தொகைகள் கண்டிப்பாக தொலை நோக்கு சிந்தனையோடு அமைந்துள்ளது.

தொழில்துறைக்கு ரூ2104.99 கோடியும், திறன்மேம்பாட்டு இயக்கத்துக்கு ரூ150 கோடி ஒதுக்கியது இளைஞர்களின் வளர்ச்சிக்கும், அவர்களது திறனை மேம்படுத்தி (skill development) அவர்களின் வாழ்கைக்கு வழிவகை செய்யும் என்பதில் சந்தேகமேயில்லை.

மேலும் சமுதாயம் முன்னேறுவதற்கு மிக முக்கியமான கல்வியானது தாழ்த்தப்பட்ட பழங்குடி மற்றும் அனைத்து மாணவர்கள் பயன்பெறும் வகையில் கல்வி உதவி தொகைக்கு ரூ 1429.94 கோடி ஒதிக்கிருப்பது வரவேற்கத்தக்கது. பள்ளி கல்வித்துறைக்கு ரூ24,130 கோடி நிதி ஒதுக்கீடு மூலம் கல்வியின் தரம் உயர்ந்த இடத்தை அடையும் என்பது எனது நம்பிக்கை.

மேலும் அடித்தட்டு மக்களுக்கான உதவித் திட்டங்கள், மானியங்கள் அவர்கள் வாழ்க்கை தரத்தை முன்னேற்றும் என்பதில் சந்தேகமில்லை. அடிப்படை தேவைகளில் ஒன்றான சுகாதாரத்திற்கு ரூ9073 கோடி ஒதுக்கீயதும் முக்கியமானது.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவேன் என்று கூறிய தமிழக முதலமைச்சர் அவர்களின் அரசு அறிவித்த இந்த 2016 - 2017 நிதிநிலை அறிக்கை நிச்சயமாக தமிழகம் முதன்மை மாநிலமாக மாறும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. மேலும் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு எனது பாராட்டுகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc
தலைவர்